MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# பொய்கையார் சுட்டும் யானை மறம்

**ப. பொற்கொடி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,
ஆரணி, திருவண்ணாமலை- 632317,
மின்னஞ்சல்:porkodi2103@gmail.com
கைபேசி:6374865686
https://orcid.org/0009-0003-2056-3433

# The Valor of Elephants as Pointed Out by Poigaiyar

**P.PORKODI**

Assistant Professor, Department of Tamil,
Dr. MGR Chockalingam Arts College,
Arni, Thiruvannmalai – 632317,
Email : porkodi2103@gmail.com
Cell: 6374865686
https://orcid.org/0009-0003-2056-3433

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## Abstract

This paper explores the theme of 'Yaanai Maram' (The Valour of Elephants) as depicted in 'Kalavali Narpathu', one of the works in the Pathinen Keelkanakku anthology. It examines how the poet Poigaiyaar employs vivid metaphors to describe the intensity of the Battle of Kalumalam, fought between the Chola King Senganan and the Chera King Kanaikkal Irumporai. Furthermore, this study substantiates the depictions of battlefield scenes, the bravery of war elephants, and the aftermath of the war by drawing on Sangam literary and grammatical evidences.

## Keywords

Kalavali Narpathu, Poigaiyaar, Yaanai Maram (Elephant Valour), Senganan, Purathinai, Vagai, Battle of Kalumalam.

## ஆய்வுச் சுருக்கம்

இக்கட்டுரை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான 'களவழி நாற்பது' உணர்த்தும் யானை மறத்தைப் பற்றி ஆராய்கிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

சோழன் செங்கணானுக்கும் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் இடையே நடைபெற்ற கழுமலம் போரின் தீவிரத்தையும், அதில் யானைப்படை ஆற்றிய பங்கையும் பொய்கையார் எவ்வாறு உவமைகளுடன் பாடியுள்ளார் என்பதை விளக்குகிறது. போர்க்களக் காட்சிகள், யானைகளின் வீரம் மற்றும் போரின் விளைவுகளைச் சங்க இலக்கிய மற்றும் இலக்கணச் சான்றுகளுடன் இக்கட்டுரை மெய்ப்பிக்கிறது.

## முக்கியச் சொற்கள்

களவழி நாற்பது, பொய்கையார், யானை மறம், செங்கணான், புறத்திணை, வாகை, கழுமலம் போர்.

## முன்னுரை

தமிழ் வரலாற்றில் போர் முறைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இலக்கியங்கள் உதவுகின்றன. இவை மக்களின் வீரத்தையும் அதன் சிறப்பையும் பற்றி விரிவாக கூறுகின்றன. சோழமன்னன் செங்கணானின் வெற்றியைப் பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## புறம்

தமிழர் வாழ்ந்த கடந்த காலப் போர் முறைகளை அடிப்படையாகக் கொண்டு புறத்திணையை வகைப்படுத்தியுள்ளனர். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. இந்த ஏழில் போர் குறித்த போர் நிகழ்வுகளையும் ஏனைய இரண்டையும் வாழ்வியலின் உண்மைகளைக் கூறக் கருதி இவ்வாகை இயற்றப்பட்டுள்ளது. போரின் துவக்கமாக ஆநிரைகளைக் கவர்தலும், கவர்ந்தவற்றை மீட்டு வருதலும் வெட்சி எனப்படும். எதிரி நாட்டு மன்னன் நாட்டை கைப்பற்ற போரிடுவதும் அதனை எதிர்ப்பதும் வஞ்சித் திணையாகும். எதிரி அமரின் அரண்மனையை மதிலை முற்றுகையிடுவதும் அதனை எதிர்த்து உள்ளிருந்து தாக்குவது உழிஞை. தன் நாட்டு நில மீது படையெடுத்து வருபவர்களை தும்பைத் திணையாகக் கொண்டு போரிடுவது தும்பை திணை ஆகும். பகைவரை வெற்றிக் கொள்வது வாகை திணை ஆகும். உலகத்தின் நிலையாமையைக் கூறுவது காஞ்சித்திணை. போரில் ஈடுபட்ட ஆண்களைப் பற்றி புகழ்ந்து பாடுவது பாடாண் திணை.

## வாகைத் திணை

போரில் வெற்றியின் நிலையைக் குறிப்பிடுவது வாகை.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இது அனைத்துப் பொருளுக்கும் பொதுவாகிறது.

**"வாகை தானே பாலையது புறனே" (தொல். பொருள். நூ. 73)**

வாகை மாலை சூடுவது போரின் வெற்றிக்கு அடையாளமாகும். பிற்காலத்தில் சிலர் விளையாட்டில் கூட இப்பூவைச் சூடினர். அதனால் அகத்தில் போகத் திணையான பாலைக்கு இது புறமாயிற்று என்றார் தொல்காப்பியர்.

## துறை விளக்கம்

அறிவு, வீரம், கல்வி போன்ற நல்லொழுக்கங்களில் அவரவர் இயல்பில் தனித்து மேன்மையுறுவது வாகை.

**"தாவில் கொள்கைத் தம்தம் கூற்றைப்**

**பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"(தொல்.பொருள்.நூ.74)**

போரில் மட்டுமல்லாமல் கல்வி சமூகத் துறைகளால் பிறரை விட்டு மேம்பட்டு தனித்து உயர்வதும் வாகையாகும்.

## தொல்காப்பியப் புறத்திணையியல்

தொல்காப்பியர் அகத்திணையைக் கூறிய பிறகு

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

புறத்திணைக்குரிய உரிய இலக்கணம் வகுத்துள்ளார். இவர் கூறிய அகத்திணையியலுக்குச் சொல்லப்படும் புறப்பகுதிகள் அந்த அகத்திணைக்கு புறமாக அமையப்பெற்றது சிறப்பு.

## புறத்திணைப் பகுப்பு

கரந்தை தவிர ஏனைய ஏழும் புறத்திணைப் பகுதியில் ஏழு திணைகளாக உள்ளதாகத் தொல்காப்பியர் கூறுகிறார். அவை வெட்சி முதல் பாடாண் வரை. இதில் பாடாண் தவிர ஏனைய திணைகளுக்கு பூ பெயரை வைத்திருப்பார்.

## மறக்களவழி

களவழி என்று தொல்காப்பியர் குறிப்பிடும் இத்துறையானது மற்களவழி, மறக்களவழி என இரு துறைகளாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

**"ஏரோர் களவழி அன்றிக் களவழித்**

**தேரோர் தோற்றிய வென்றியும்"(தொல்.பொருள்.நூ.75)**

என்ற தொல்காப்பியப் பாடல் வரிகள் களவழி பற்றி கூறுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## அறக்கள வேள்வி

தொல்காப்பியர் இத்துறையைத் தனித்துக் கூறாமல் மறக்களவழியுடன் சேர்த்தே கூறியுள்ளார். ஆனால் புறப்பொருள் வெண்பாமாலையில்

**"அவிழ்ந்த தண்ண்மார்**

**அடுதிறலான் களம்வேட்டன்று"(புறம். வெண்பா, வாகை திணை, நூ.20)**

என்று இலக்கணம் கூறியுள்ளார்.

## களவழி நாற்பது

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலேயே புறம் சார்ந்த போர் செய்தியைப் பற்றிச் கூறும் ஒரே நூல் களவழி நாற்பதாகும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் நச்சினார்க்கினியர் போன்ற சிறந்த உரையாசிரியர்களின் உரைகளும், சில தனிப்பாடல்களும் இதனைச் குறிப்பிடுகின்றன.

## பெயர்க் காரணம்

உன்னைப் பற்றியும், போர்க்களம் பற்றியும் பாடப்பெறும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

பாடல்கள் களவழி எனப்படும்.களத்து என்று பாடல்கள் முடிவடைவதாலும், போர்க்கள நிகழ்வுகளைப் பற்றிச் கூறுவதாலும், பாடல்களின் எண்ணிக்கை நாற்பதாக இருப்பதாலும் களவழி நாற்பது எனப் பெயர் பெற்றது.

## நூல் தோன்றக் காரணம்

கீழ்க்கணக்கு நூல்களில் புறநூலாக இருக்கும் களவழி நாற்பது என்னும் நூலை இயற்றியவர் பொய்கையார். கழுமலம் போரில் சோழன் செங்கணான் திருப்போர்ப்புறம் என்ற இடத்தில் சேரமான் கணைக்காலிரும்பொறையோடு போரிட்டு வெற்றி பெற்று சேரமன்னனைச் சிறைபிடித்தான் என்றும், இதனையறிந்த பொய்கையார் சோழனைப் பற்றியும் அவனது போர் திறமையைப் பற்றியும் புகழ்ந்து பாடி சேர மன்னனைச் சிறையிலிருந்து விடுதலை செய்தார் என்று கூறப்படுகிறது. இந்த வரலாற்றுக் குறிப்புகள் பிற்காலத்தில் வெளிவந்த கலிங்கத்துப்பரணி, மூவருலா, தமிழ்விடுதூது போன்ற நூல்கள் குறிப்பிடுகிறது. இந்நூல் ஆசிரியரின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்று குறிப்பிடப்படுகிறது.

## நூலின் அமைப்பு

பொய்கையார் இந்நூலை நான்கு அடியால் ஆகிய வெண்பாக்களால் இயற்றியுள்ளார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இந்நூலில் அளவியல் வெண்பாக்கள் 22 பாடல்களும், பஃறொடை வெண்பாக்கள் 19 பாடல்கள் என 41 பாடல்கள் உள்ளன. இந்நூலில் பொருத களத்து என்று 35 பாடல்கள், பெய்த களத்து என்று 1 பாடலும், வீழ்ந்த களத்து என்று 1 பாடலும், அட்டக்களத்து என முடியும் படியாக 36 பாடல்கள் மொத்தம் 41 பாடல்கள் உள்ளன.

- **அட்டக்களத்து - பிழை செய்தவரைக் கொன்ற போர்க்களம்.**
- **பொருத களத்து - போர் செய்த போர்க்களம்.**
- **பெய்த களத்து - அம்பு மழை பொழிந்த போர்க்களம்.**
- **வீழ்ந்த களத்து - யானைகள் இறந்து வீழ்ந்த போர்க்களம்.**

## நூலின் சிறப்பு

இந்த நூலில் யானைப் போர் பற்றிய செய்திகளையே அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், வீரர்கள் போர் புரிவதை சில அஃறிணைப் பொருட்களோடு ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது. போர்க்களக் காட்சிகளையும் மிகச்சிறந்த உவமைகள் மூலம் சிறப்பாகக் கூறப்பட்டு உள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## யானை மறம்

யானைகளின் மறத்தைப் பற்றிச் சொல்வது யானை மறம் எனப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது. இதனை,

**"எழு மரவம் கடற்றானையான்**

**மடி களற்றின் மறங்கிளந்தன்று"(புறப். வெண்பா, வாகை திணை,நூ.19)**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. மேலும், வீர கழல் அணிந்த வேந்தனின் கொல்வடிவமானது எதிரி அரசின் கடல் அலை போன்ற படையில் புகுந்து அதனை அழிப்பதும், அதன் மேல் அமர்ந்து இருக்கும் வேழங்களையும் உண்ணக் காத்திருக்கும் கழுகுகளும், கூற்றுவனும் தன்னைப் பின் தொடர்ந்து வர மிகுந்த சினங்கொள்ளும் என்பதாகக் குறிப்பிடுகிறது.

களிறின் ஆற்றலால் பகைப்படைக்கு ஏற்பட்ட அழிவினைப் குறிக்க பின்வரும் பாடல் விளக்குகிறது:

**"அடிகளார் காணின் அலமருவர் மன்னர்**

**வடிக்குளம் உமிழும் மின்னயல் கடற்படையுள்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**பெய்யும் எருவையும் நூற்றெண் மின்படரக்**

**காயும் கடலான் களிறு."**(**களவழி. பா.**15)

## யானையின் நிலை

போரின் கொடுமையால் தன் இரு கண்களையும் இழந்த களிறு வீரர்களின் இரத்த வெள்ளத்தில் மிதந்து வரும் முரசை கவனிக்காமல் அதை உதைத்து அது மேகம் இடிக்கும் ஓசை என்று எண்ணித் துடிப்பதைக் காட்சி அளிக்கலாம். பகைவர்களின் கோபத்தால், போரில் வேல் போன்ற ஆயுதங்களால் யானைகளின் துதிக்கையை அறுத்தனர். அந்த துதிக்கை மலையில் இடி விழுந்து புரண்டு விழும் பாம்புகளைப் போலப் போர்க் களத்தில் சுருண்டு கிடந்தன, என்பதை,

"**நிறைதிறிபு நீள்எஃகம் நீட்டி வயவர்**

**வரைபுரை யானைக்கை மாற - வரைமேல்**

**உருமெறி பாம்பின் புரளும் செருமொய்ம்பின்**"(**களவழி. பா.**22)

என்ற பாடல் எடுத்துரைக்கிறது.

## போரின் கொடுமை

பல வீரர்களின் உடல்கள் இரண்டு பட்டு பூமி முழுவதும் நிறைந்து இருந்தன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

பல வீரர்களின் தலைகள் மலைகள் போல உருண்டு ஓடின. குருதியானது கடல் போன்று ஓடின. அந்த கடல் நீரில் வீரர்களின் உடல்கள் மிதந்தன. இந்நிகழ்வை,

**"விருதர் இருதுணி பார்க்கி றைத்தன**

**விடர்கள் தலைமலை யாய்நெ ளிந்தன**

**குருதி குறைகடல் போலிப் பரந்தன**

**இடறிக் குருதியி னின்மீன் மிதித்தவே.**

”(**கலிங்கத்துப் பரணி, பா.219**)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

## யானை தந்தம்

எதிரி நாட்டு வீரர்கள் எறிந்த வேல்கள் யானையின் நெற்றியில் ஆழமாகப் பதிந்து இரண்டு தந்தங்களுக்கு நடுவே மூன்றாவது தந்தம் போல இருந்தது. இரண்டு தரப்பு படைகளிலும் உள்ள யானைகள் ஒன்றோடு ஒன்று எதிர்த்துப் போரிடுவதைப் பார்த்தவர்கள் இவை இரண்டும் மலைகளோ என்று கூறும் படியாக இருந்தது. அந்த யானைகள் கொம்புகளோடு கொம்புகளால் தாக்கிப் போர் புரியும் போது அவற்றின்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

தந்தங்களிலிருந்து தீப்பொறிகள் துள்ளி மலை எருதுகளின் மடியிலிருந்தும் கொடிச் சிலைகள் தீப்பொறி எறிந்தன, என்பதை,

**"வரைபொரு வரைபொரு மான்கரி மருப்பொடு**

**மருப்பெதிர் மலைவன மலையெருமை**

**நிரைபொர மலியெரி கொப்புள மிப்பவை**

**நெருப்பொடு மெரிப்பொறி தெறிப்பனவே."**

(**கலிங்கத்துப் பரணி, பா.205**)

எனும் கலிங்கத்துப்பரணி பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

## குருதி வெள்ளம்

பகை வீரர்களைக் கொன்று இரைக்குத் தேடிய குருதியானது பெரிய வெள்ளமாகப் பரவியது. அந்த வெள்ளமானது மலைகளை உருட்டிச் செல்லும் மெல்லின நீரைப் போல, கொல்லப்பட்ட போர் வீரர்களையும் இழுத்துச் சென்றது. இந்நிகழ்வை,

**"மடங்க எறிந்த மலையருவும் நீர்போல்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**கடந்தகண்ட வரைகுருதி லொல்கிற்று எரிக்கும்**

**மடங்கல் மறமொய்ம்பின் களம் "(களவழி. பா.30)**

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

## போரின் வெற்றி

மன்னனுடைய யானை போர்க்களத்தில் வெற்றிக் களி மேவி வெற்றி கொண்டது. யானையின் நான்கு கால்களும் பெருமையுடன் நின்றன. இதனை,

**"கச்சி ஒரு கால் மிதியா, ஒரு காலால்**

**தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப் பிற்றையும்**

**ஈழம் ஒரு கால் மிதியா வருமே, நந்தொலைவா**

**நிதி"(முத்தொள்ளாயிரம், பா.74)**

எனும் முத்தொள்ளாயிரப் பாடல் எடுத்துரைக்கிறது.

## மலை போன்ற யானைகள்

போரில் வீரத்துடன் செயல்படுகின்ற வல் முதலான யானைகளின் வலிமை எரிக்கக் களிறுகள் பார்ப்பதற்கு கரிய மலைகள் மலைகள்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

போன்றே காட்சியளிக்கிறது. மரபிலான பகை வீரர்களின் குருதி வெள்ளத்தில் மிதந்து எழுந்து மதக் களிறைப் பார்க்க சாதாரணமாக மலை போன்று இருந்தது. இதனை,

**"அதிர்பேய் குன்றமை யானை அமர்க்கண்**

**இரிந்தெங்கும் ஓடிநின் றார்ப்ப - அஞ்சனக்**

**குன்றேக்கும் யானை அமர்க்களத்து அட்டக்களத்து**

**இன்றை யிருக்கின்ற போன்றே.”** (**களவழி. பா.21**)

என்ற களவழி பாடல் மூலம் அறியலாம்.

## யானை சென்ற இடம்

போர்க்களத்தில் எல்லா இடங்களிலும் களிறுகள் சென்று வருவதால் இடைகள் எல்லாம் அழிந்து அவை சென்ற இடமெல்லாம் மணலாகின என்று கூறுகின்றன. போரில் யானைகள் சென்ற இடத்தில் பிணங்கள் அடி அவை பார்க்க ஓச்சனால் நம் தொழில் செய்யப்படும் இடங்கள் போன்றே காட்சியளிக்கிறது. இதனை,

**"கொல்யானை பாயக் கிடைநுக்கி எவ்வாயும்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**புல்வாய் எல்லாம் மணி பரந்தைத் - தச்சன்**

**வணபக பள்ளியில் தோன்றும்"(களவழி. பா.14)**

என்ற பாடல் வாயிலாகத் தெரிகிறது.

## போரின் கொடுமை

மன்னன் பகைவர்களைக் கொன்று குவித்த போர்க்களத்தில் பிணங்களை உண்ண வரும் கழுகுகள், பிணங்களை இரக்கத்தோடு சுவைப்பது உண்பதும் அந்த காட்சி அதிர்வு இல்லாத மென்மையான ஓசையைத் தரும் பறைவாத்தியைத் தட்டி இசையை உண்டாக்குவது போல இருந்தது.

சண்டை வெறியால் பறந்து கீழே விழுந்த படைத்தலைவர்களின் வெண்கொற்றக் குடைகள் இரத்தம் சையும் பட்டு பஞ்சு அடைக்கப்பட்ட தட்டுகளைப் போல இருந்தது என்பதனை,

**"மைந்தகால் யாத்து மயங்கக் காட்டினுள்**

**புய்தீப் போகிப் புலால்முகந்த வெண்குடையை**

**பஞ்சிபெய் தாளகம் போன்ற "(களவழி. பா.39)**

என்னும் களவழி பாடல் மூலம் புலனாகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## முடிவுரை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான களவழி நாற்பது ஒரு புறம் சார்ந்த நூலாகும். சோழ மன்னனும், சேர மன்னனும் சேர்ந்து நடத்திய போரில் களிறுகள் எவ்விதம் போர் புரிந்தன என்பதையும், போரில் நடந்த கொடுமைகள், குருதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட களிறுகள் பற்றியும், போரின் கொடுமை பற்றியும் இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துரைத்துள்ளது.

## துணை நூற்பட்டியல்

1. பொய்கையார், களவழி நாற்பது, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, (பதிப்பு ஆண்டு: 1950).
2. தொல்காப்பியர், தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை), சாரதா பதிப்பகம், சென்னை, (பதிப்பு ஆண்டு: 2010).
3. ஐயனாரிதனார், புறப்பொருள் வெண்பாமாலை, உ.வே.சா. நூலகம், சென்னை, (பதிப்பு ஆண்டு: 1963).
4. முத்தொள்ளாயிரம் மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், (பதிப்பு ஆண்டு: 1982).

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## Bibliography

1. Poigaiyaar, Kalavali Narpathu, Saiva Siddhanta Noorpatippu Kazhagam, Chennai, (Year of Publication: 1950).
2. Tholkappiyar, Tholkappiyam Porulathigaram (Ilampooranar Commentary), Saradha Pathippagam, Chennai, (Year of Publication: 2010).
3. Ayyanarithanar, Purapporul Venba Maalai, U.V. Swaminatha Iyer Library, Chennai, (Year of Publication: 1963).
4. Muthollayiram Moolamum Uraiyum (Muthollayiram: Original Text and Commentary), Tamil University, Thanjavur, (Year of Publication: 1982).